gistered as a News
paperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத. ருஅ] யாழ்ப்பாணம்— பார்த்திப ஞூ பங்குனிமீ உகஉ (1946 ஏப்பிறில் 5 வெள்ளிக்கிழமை) [இல உ

## ஐரோப்பாவின் எதிர்காலம்

### ஜெர்மனி தோல்வியடைந்தது எதனுல்? சோவியத் ருஷியாவின் அபார தியாகம்

### ஐரோப்பா ஈடேற ஒரே ஒரு வழி சோவியத் முறையைப் பின்பற்றுவதே

(நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்)

[ஜெர்மனி வீழ்ச்சியடைந்ததும், பர்மாவுக்கப்பால் இந்திய தேசீய இராணுவத்துடன் இருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன் சாரம் வருமாறு.]

ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டது ஆனல் அது எதிர்பாராதவிதத்தில் முடிவடைந்தது எவர்க்கும் வியப்பைக் கொடுக்க ஏதுவாகும். இனியும் பல காலத்துக்கு ஜெர்மன் ராணுவபீடத்தால் போரை நடாத்த முடியாது என்பது வெட்ட வெளிச்சமாக இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே (1945-ம் ஆண்டு) எவர்க்கும் துலாம்பரமாகப் புலப்பட்ட போதிலும், இந்த யுத்தம் எப்போது எவ்வாறு முடியும் என்பதை எவரும் கூற முடிந்தது இல்லை.

சர்வாதிகாரி ஹிட்லர் மரணம் அடையும் அந்நாள்வரை ஜெர்மன் ராணுவம் ஊக்கம் தளராது, மெய் சோராது, மரணத்துக்கஞ்சாது போர்புரிந்த தன்மை இந்த அகில உலகமும் வியக்கத்தக்க ஓர் விஷயமாகும். இராணுவ விஷயமாக ஏற்பட்ட பிழையினுல் ஜெர்மனி தோற்கவில்லை; அரசியற் கோளாறுகளாலேயே அது தோல்வியடைந்தது என்பதே எனது அபிப்பிராயம். சோவியத் ருஷியா விஷயமாகவும் ஏனைய நாடுகள் விஷயமாகவும் கொண்டிருந்த அயல் நாட்டுக் கொள்கையே ஜெர்மனியின் அழிவுக்கும் சிதைவுக்கும் மூலாதாரக் காரணமாகும். இரண்டு முனையில் போர்செய்வது ஆபத்து என்று ஜெர்மன் ராஜதந்திரியான பிஸ்மார்க்கு, இந்த நூற்றூண்டின் முற்பகுதியில் ஜெர்மன் மக்களுக்கு உபதேசித்துள்ளார். அந்தப் பெரும் போதனையைக்கைவிட்டு இருமுனையில் யுத்தம் செய்ய முனைந்தது தான் ஜெர்மனியின் தோல்விக்கும் பிரதானமான ஓர் காரணமாகும்

#### யுத்தநிலையில் மாறுதல்

1940-ம் ஆண்டிலே, ஐரோப்பிய யுத்தநிலையில் மாறுதல் ஏற்பட்டது. ருஷிய அந்நியநாட்டுமந்திரி மொலட்டாவ் அவ்வாண்டில் பேர்லின் சென்றூர். அந்தக் காலத்திலே ஜெர்மனியர் உண்மையான இராச தந்திரிகளாக விளங்கி, மொலட்டாவுடன் பேசி, அவர்மூலமாக ருஷியாவுடன் எப்படியாவது ஓர் சமாதான உடன்படிக்கைக்கு வந்திருப்பார்களேயானல், இந்தக் கேவல நிலைமை ஜெர்மனியருக்கு நிகழ்ந்திருக்காது. பிஸ்மார்க் உயிருடனிருந்திருந்தால், அவர் நிச்சயமாக ருஷியாவுடன் சமாதானமாகவே இருந்திருப்பார். ஆனல், என் செயலாம், முந்திய மகாயுத்தத்தில் ஞானமான இராச தந்திரத்தால் எவ்வாறு ஜெர்மனி தோல்வியுற்றதோ, அதேவாறு இரண்டாம் உலக யுத்தத்திலும் அந்நாடு சீரழிந்தது.

#### இனி நடப்பது என்ன?

ஜெர்மனி முறியடிக்கப்பட்டு விட்டது; ஆனல் இனி நடப்பது என்ன? இனி ஐரோப்பாவின் எதிர்கால நிலைமை என்ன? சர்வதேசவியவகாரங்களிற் சிரத்தையுள்ள எவரையும் பாதிக்கும் பெரும் பிரச்சினை இது. இவ்விஷயமாக எனது அபிப்பிராயம் மிகவும் தெளிவானது. நான் அநேக வருஷங்களாகக் கொண்டிருந்த அபிப்பிராயத்தையே இன்றும் கொண்டுள்ளேன். அந்த அபிப்பிராயம் இப்போது இன்னும் ஸ்திரப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் சிதைவு, சோவியத் ருஷியாவை ஓர் கட்சியிலும், ஆங்கில - அமெரிக்க வல்லரசுகளை எதிர்க் கட்சியிலும் கொண்டுபோய் விடுத்து அவ்விரு கட்சிகளுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளை, பிணக்குகளை இன்னும் அதிகமாக வலுப்படுத்திவிட்டது சோவியத் ருஷியாவின்யுத்தநோக்கங்கள் ஆங்கில-அமெரிக்க வல்லரசுகளின் யுத்த நோக்கங்களுக்கு நேர்மாறுனவை என்பதை அகில உலகமும் அறியும். தனது மக்களின் மகத்தான தியாகத்தால், தனது ராணுவத்தின் ஆற்றலால், எது வந்தாலும் பகைவனுக்குப் பணிவதில்லை என்று லட்சக்கணக்கான தன் மக்கள் இரத்தம் சிந்தியதால் தான் ஜெர்மனி தோல்வியடைந்தது என்று ருஷியா கருதுகிறது. எனவே, தன் பலத்தில், தன் வலிமையில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள ருஷியா, ஐரோப்பாவின் புனர் நிர்மாண வேலையில், ஆங்கில-அமெரிக்க கட்சிக்குக் கட்டுப்பட்டு அதற்குப் பணியப்போவதில்லை. எனது கூற்றின் உண்மை சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டிலேயே புலப்பட்டுவிட்டது. அந்த மகாநாடு, ருஷியப் பிரதிநிதியான மொலட்டாவ் வெளியேறியதிலிருந்து ஓர் விகட நாடகக்காட்சியாய்விட்டது. அந்தமகாநாடு, பின் நிகழப்போகும் ஐரோப்பிய சம்பவங்களுக்கு ஓர் உற்பாதமேயாகும்.

#### ஐரோப்பாவின் இன்றைய நிலை

ஐரோப்பா இப்போது என்றுமில்லாத கேவல நிலையில் தத்தளிக்கிறது. இரண்டாவது உலக யுத்தம் தொடங்குமுன், ... யில் ஐ...

## பண உதவி கோரி மனு

### பண்ணைப்பகுதிப் படகுப் போக்குவரத்து

பண்ணைத்துறைப் படகுப்போக்குவரத்து ஐக்கிய சங்கத்தின் பொருளாதார நிலை திருப்தியற்றதாக இருக்கிறது. அவசியம் செய்யவேண்டிய வேலைகள் பல உண்டு; இவற்றுக்கெல்லாம் போதிய பண உதவியும் மற்ற வசதிகளும் வேண்டும் என்று ஷை சங்கம் போக்குவரத்துப் பகுதி மந்திரிக்கு ஓர் மனுவைச் சமர்ப்பித்திருக்கிறது. இந்த மனுவிற் காட்டியுள்ளபடி, 1942ம் ஆண்டில் அரசாங்கத்துக்கு 597725 ரூபா நட்டமேற்பட்டபின்னர். இவ்வேலை ஷை சங்கத்தின்வசம் விடப்பட்டது பல வசதியீனங்கள் காரணமாக, சங்கமும் இலாபகரமாகத் தொழிலைச் செய்ய முடியவில்லை என்றும், இதுவரை 1100 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் மத்திய கூட்டுறவு வங்கிக்கு 707330 ரூபா கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது என்றும், சங்க உத்தியோகத்தர்க்கும் வேலைக்காரர்க்கும் ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கமுடிகிறதில்லை என்றும் ஷை மனுவில் காட்டப்பட்டிருக்கிறது.

---

அக் கண்டத்தைப் பொம்மைபோல் ஆட்ட முயற்சித்தனர். அப்படியான கேவல நிலைமையை ஒழிக்க ஜெர்மனி ஓர்திட்டம் வகுத்திருந்தது சென்ற 5 ஆண்டு காலத்தில் அந்தத் திட்டத்தை நடைமுறையிற் கொண்டுவர ஜெர்மனி முயற்சித்தது. இப்போது ஜெர்மனி முறியடிக்கப்பட்டுவிட்டபடியால், அதன் திட்டமும் அழிந்துவிட்டது. பிரான்ஸ், அமெரிக்கா என்பவற்றின் உதவியுடன், ஐரோப்பாவில் சமபலக் கொள்கையை இங்கிலாந்து சாதிக்கமுயலலாம். அதாவது, எந்தவல்லரசாவது அதிக வலிமை பெருமல் இருக்கப் பார்க்கும் கொள்கையே இது. இந்தக் கொள்கையை இங்கிலாந்து பலவாண்டு காலமாக அநுசரித்து வந்திருக்கிறது. ஆனல் இந்தக் கொள்கையை இனிஒருபோதும் ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொள்ளமாட்டா. உலகசரித்திரத்தில் தனது செல்வாக்கை நாட்டி, தனது அதிகாரத்தை ஐரோப்பாவில் ஸ்தாபிக்க அமெரிக்கா எண்ணலாம். ஆனல், அத்லாந்திச் சமுத்திரத்துக்கப்பால் உள்ள அமெரிக்கா ஐரோப்பாவில் தன் ஆதிக்கத்தை ஸ்திரமாக நிலைநாட்ட ஒருபோதும் முடியாது. மேலும், முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆங்கில-அமெரிக்க வல்லரசுகள், யுத்தத்தின் கொடுமையால் வாடிவதங்கி, வறுமைப் பிணியால் தவிக்கும் ஐரோப்பிய மக்களுக்கு உடன்பாடாயுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வழங்கத் தகுதியுடையனவோ என்பது பெருஞ் சந்தேகம் எனவே, ருஷியா ஒன்று தான் ஐரோப்பாவுக்குப் புத்துயிர் கொடுக்க வல்லது. ருஷிய ஆட்சி முறை சோவியத் குடியரசில் மிகுந்த பலன் கொடுத்திருக்கிறது. அந்த முறையை ஐரோப்பாவிலும் அநுசரிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். ஆனல், அமெரிக்காவும், இங்கிலாந்தும், ஐரோப்பாவில்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## "இலங்கை சிங்களர்க்கே"

### குறுகிய மனப்பான்மை யுடையோரால் நாட்டுக்கு ஏற்படும் தீமை

### நூவான்வேலைப் பிரதிநிதி பேச்சு

யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் ஒன்று சென்றவாரம் கொழும்பு கிறிஸ்தவ வாலிபர்சங்க மண்டபத்திற் கூடியது. கல்லூரி அதிபர் மிஸ்ரர் S. K. பங்கர் தலைமை வகித்தார்.

கல்லூரி சம்பந்தமான பல விஷயங்கள் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்பின் ஓர் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் பிரபல சிங்களத் தலைவர்சிலரும் பங்கெடுத்துக்கொண்டனர்.

அரசாங்கசபையில் நூவான்வலைப் பிரதிநிதியான மிஸ்ரர் R. E ஜெபத்திலகா, இன்று இலங்கையில் விவாதிக்கப்படும் பல பிரதான விஷயங்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"வருங்கால இலங்கை, இன்றைய இளைஞர் கையில் இருக்கிறது. நாம் இந்தியாவை ஒருபோதும்புறக்கணிக்க வொண்ணுது. அந்தப்பெரிய நாட்டுடன் நாம் ஒத்துழைக்க வேண்டும்." பாஷைப் பிரச்சினை விஷயமாக மிஸ்ரர் ஜெபத்திலகா பின்வருமாறு கூறினர்:

"எங்கள் தேசத்தின் எதிர்காலம் அரசாங்கசபையின் கையிலிருப்பதாயிருந்தால், அதனைப்போலக் கேவலமான நிலை வேறு ஒன்றும் இராது. ஆண்டவன்தான் இந்நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டும். இலங்கை சிங்களர்க்கே சொந்தம் என்று சொல்பவர்களும், சிங்களம் ஒன்றுமட்டுமே அரசாங்கபாஷையாக இருக்கவேண்டுமென வாதிடுபவர்களும் குறுகிய மனப்பான்மைக்காரராவர். அவர்களால் நாட்டுக்குத் தீமையேயொழிய நன்மை யாதுமில்லை".

---

## இன்னும் நாலு வருஷத்துக்கு அரிசிப் பஞ்சமா?

### பிரிட்டிஷ் அரசினரின் அறிக்கை

உலகிலே இப்போது நிலவியுள்ள உணவுப் பஞ்சத்தைப்பற்றி, பிரிட்டிஷ அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது, அந்த அறிக்கையின்படி, உலகிலே அரிசிப் பஞ்சம் மிகக் கொடியதாயிருக்கிறது என்றும், இப்போது உள்ள அரிசி கீழ்நாட்டு மக்களைப் போஷிக்கப் போதாது என்றும் தெரியவருகிறது. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

எதிர்காலத்தில்தான் அரிசி நிலை சீர்ப்பட்டுவிடுமோ என்றும் சொல்லுதற்கில்லை. உலகில் அரிசி விளைவு திருப்திகரமாயில்லை. பர்மாவில் நெல் விளைவு முந்திய நிலைமைக்கு வருவதுக்குக் குறைந்தபட்சம், இன்னும் நாலு ஆண்டுகளாவது செல்லும்.

யுத்தம் தொடங்குமுன் பர்மாவிலும், சீயத்திலும் ஏறக்குறைய 85 லட்சம்தொன் அரிசி விளைவிக்கப்பட்டது. இப்போது ஏறக்குறைய 50 லட்சம் தொன் அரிசிதான் விளைவிக்கப்படுகிறது.

கோதுமையின் நிலைமையும் திருப்திகரமானதாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், பார்த்திபவஞ
பங்குனிமீ உகூ வெள்ளிக்கிழமை

## வித்தியாபகுதியாரின் விபரீத சுற்று நிருபம்

இலங்கைமக்களுக்கு வித்தை பயிற்றுங் கடப்பாட்டை வகித்திருக்கும் இலங்கை அரசாங்க வித்தியாபகுதியார் நேரத்திற்கு நேரம் நிலை மாறுவதிலும், ஒன்றோடொன்று ஒருங்கு முரண்படும் சுற்று நிருபங்களை வாரந்தோறும் இல்லையேல் மாசந்தோறும் தீர்க்கமாக யோசித்தலின்றி வெளியிடுதலிலும் அவப்பேர் கேட்டு வருகின்றார்கள்; இலங்கையரசாங்கத்திலே வேறு எந்தப்பகுதியிலும் இப்படியான நேரத்திற்கு நேரம் மாறுந் தன்மையும் விபரீதமும் இல்லையெனலாகும்.

வேதனமின்றி இலங்கையிலுள்ள மக்கள் ஆங்கிலங் கற்கலாகுமென்ற பிரமாணமும், இதற்கியையத் திருத்தப்பட்ட புதிய கல்வி முறைத்திட்டமும் அநுசரணைக்கு வந்து இன்னமும் ஆறுமாசங்கள் தாமுஞ் செல்லவில்லையாகும். கல்வி விஷயமாக அப்புதியபிரேரணைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், அதனை அநுசரிக்கச் செய்வதற்கும் வித்தியாபகுதி மந்திரியும் இலங்கையிலுள்ள வித்தியாபிமானிகள் உபாத்தியாயர்கள் வித்தியாசாலைகளின் அதிபர்களும் பட்டபாடும் அலைந்த அலைச்சலும் சற்றல்ல; இந்த வித்தியா விஷயமான திருத்தப் பிரேரணைத் திட்டம் இன்னமும் இலங்கையிலுள்ள சில வித்தியாசாலைகளில் அநுசரிக்கப்படவில்லையாகும்; புதிய வித்தியா முறைத் திட்டத்தின்படி வித்தியாசாலைகளிற் கல்வி பயிற்றத் தொடங்கி இன்னமும் மூன்று நான்கு மாசங்கள்தாமுஞ் செல்லவில்லை; சில வித்தியாசாலைகளிற் புதிய கல்வித் திட்டத்தை உள்ளபடி யநுசரித்துக் கல்வி யூட்டுதற்கு அறியாது உபாத்தியாயர்கள் நின்று இடர்ப்படுகின்றனர்.

இப்படியெல்லாமிருப்ப, இப்பொழுது வித்தியாபகுதியார், முந்திய கல்வித் திருத்தத் திட்ட முறைக்கு நேர்மாறான சுற்று நிருபமொன்றைவிடுத்து, அதனால் சுதேசபாஷை வித்தியா சாலைகளிற் கல்விபயிற்றும் உபாத்தியாயர்கள் வித்தியாசாலையதிபர்கள் பெற்றோர்கள் பிள்ளைகள் வித்தியாபிமானிகளாகிய எல்லோருந் திகைக்கும்படி செய்யலாயினர்; இதனால் இலங்கை வித்தியா பகுதியாரிடத்து ஏதும்அந்தரங்கமான பிழையுண்டோவென்றும் பலர் அப்பகுதியார்மேற் சந்தேகப்படலாயினர்; புதிய கல்வித் திருத்தத் திட்டத்தின்படி சிங்களப் பிள்ளைகள் தம் தாய்மொழியாகிய சிங்களத்தையும், தமிழ்ப் பிள்ளைகள் தம் தாய்மொழியாகிய தமிழையும் அந்த அந்த மொழியைப் பயிற்றுதற்கென ஸ்தாபித்து நடைபெற்று வரும் பள்ளிக்கூடங்களிலேயே ஐந்தாந்தரம் முடியப் பயிலவேண்டுமென்பதும், அதன்மேற்றான் ஆங்கில வித்தியாசாலைகளிற் சேர்ந்து அந்தப் பிள்ளைகள் படித்தற்கு அருகராவரென்பதுமேயாகும்; இதற்கு முந்திச் சிங்களப் பிள்ளைகளாக, தமிழ்ப் பிள்ளைகளாக, தத்தம் பாஷைக்குரிய பள்ளிக்கூடங்களில் மூன்றாம் வகுப்பு முடியப் படித்துவிட்டு அதன்பின்பே ஆங்கில வித்தியாசாலையிற்சேர்ந்து படிக்கலாமென்ற பிரமாணம் இருந்தது; இதனால், சிங்களப் பிள்ளைகளும் தமிழ்ப் பிள்ளைகளும் தத்தம் தாய்மொழியில் ஆரம்பக் கல்வியைத் தானும் பயில்தலின்றி, அம்மொழிகளை யலட்சியஞ் செய்து, ஏதும் உத்தியோகத்தை யுத்தேசித்து ஆங்கிலத்தை மாத்திரங் கற்கத் தலைப்பட்டுத் தாய்மொழிக்கு அந்நியராகி இடர்ப்பட்டு வரலாயினர்; இந்தப் பெருங்கெடுதியை அகற்றி இலங்கையிலுள்ளமக்கள் தத்தம் தாய்மொழிகளில் ஆரம்பக் கல்வியையேனும் பயின்றபின் ஆங்கிலத்தைப் படித்தற்குப் புகச் செய்யலாமென்றே, சுதேச மொழிகளில் ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்தபின் ஆங்கில வித்தியாசாலைகளிற் சேர்ந்து படிக்கலாமென்ற புதுத் திட்டப் பிரமாணம் எழுந்ததாகும்; ஆனால் இப்பொழுது, பழையபடி 'வேதாளம் முருக்கமரத்தி லேறிக்கொண்டது' என்றவாறு பழைய மூன்றாம் வகுப்புப் பிரமாணத்தையே கையாளலாமெனவித்தியாபகுதியார், எவருங் காத்திராப் பிரகாரம் சுற்று நிருப வாயிலாகத் தெரிவிக்கலாயினர்; இந்தப் பிரமாணம், குயவனுக்குப் பலநாள் வேலை தடியடி காரனுக்கு ஒரு கண வேலை யென்றவாறு இலங்கையிலுள்ள தாய்மொழிகளிரண்டிற்கும் அநர்த்தம் விளைப்பதாயிற்று.

உயர்தர ஆங்கிலக் கல்வியைத் தானும் பள்ளிக்கூட வேதனமின்றிப்படித்தற்காகிய ஒழுங்கு இப்பொழுது மாணவர் விஷயத்தில் ஏற்பட்டிருத்தலால், தாய்மொழிகளில் அபிமானமற்றவர்களாகியபெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஆங்கில கலாசாலையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும், பிள்ளைகள் அங்கே சேர்ந்து படிப்பதற்கும் தமிழ் சிங்கள மூன்றாந்தரப் பரீட்சை யெப்பொழுது முடியு மென்பதையே எதிர் பார்த்தவண்ணம் இருப்பார்கள்; குறித்த வகுப்பிற் சித்தியடைந்தவுடன் எல்லாப் பிள்ளைகளும் சுதேசமொழிக் கலாசாலைகளைக் கைவிட்டு ஆங்கில வித்தியாசாலைகளிற் சென்று கல்வி பயிலத் தலைப்படுவரென்பது சரதம்; இதனாற் சிங்கள மொழியேனும், தமிழ்மொழியேனும், உத்தியோகத்தை விரும்பிப் படிக்கும் ஆங்கில மொழியேனும் இந்நாட்டில் விருத்தியடையுமென எதிர்பார்த்திருத்தல் வீணும். இலங்கையிலுள்ள பல்லாயிரக் கணக்கான தமிழ் சிங்கள வித்தியாசாலைகளின் [illegible] கதியும், இம்மொழிகளைப் பயிற்றுவதில் ஈடுபட்டிருக்கும் பதினாயிரக் கணக்கான உபாத்தியாயர் கதியும் என்னவாகுமோ யாமறியேம்; இப்பொழுதும் உபாத்திமைத் தொழிலிற் பயிற்சியும், தராதரப்பத்திரமும் பெற்ற பன்னூற்றுக் கணக்கான சுதேசமொழி உபாத்தியாயர்கள், அவர்களுள்ளும் ஆண்பாலார், சேவை செய்தற்கு வித்தியாசாலைகளில் இடமின்மையால் வருடக் கணக்கிலே வேலையின்றி இலவுகாத்த கிளிபோல் ஏமாந்து சும்மாயிருக்கின்றார்களே! இவர்களின் கதி யென்னாகும்? இவைகளையெல்லாம் இந்த வித்தியாபகுதியார் சிந்திப்பதில்லையா?

இலங்கை மக்களுக்குக் கல்வி யூட்டும் விஷயத்திலே வித்தியா மந்திரி ஒருபக்கமாக, வித்தியாதிகாரி இன்னொரு பக்கமாகக் கருமமாற்றத் தலைப்பட்டுக் கொண்டனர் போலும்; இந்த விஷயத்திலே வித்தியாமந்திரியும் அவருடைய கல்வி நிர்வாகசபையாரும் அவதானமாயிருந்து கருமஞ் செய்தல் வேண்டும்; இனி, சுதேச மொழி உபாத்தியாயர்களாயுள்ளவர்களெல்லாரும் தங்களுக்கு நேர்ந்த ஆபத்தையுணர்ந்து, இப்பொழுது வரும் வருடப் பிறப்பு விடுமுறை நாட்களில் இடந்தோறுங் கூட்டங்கள் கூட்டித் தங்களுக்கும் தாய்மொழிகளுக்கும் நேரவிருக்கும் பேராபத்தையிட்டு யோசித்து எவ்வாற்றானும், வித்தியாதிகாரி விடுத்த சுற்று நிருபத்தை அறவேயகற்றிவிடுதற்காகிய முயற்சிகள் செய்தல் வேண்டும்; "அடப்பங் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்பது பழமொழி.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—94)

"உங்களுக்கு
நீடித்த ஆயுள்போலும்"

தங்கள் வீட்டு வேலைக்காரனாகிய இராமனையனுப்பித் துறவியம்மாளை அழைப்பிக்கவேண்டுமென விசாலாட்சி எண்ணிக்கொண்டிருப்பதற்கிடையில் அடுத்த நாள் இரவு 8 மணிக்குமேல் அந்தத் துறவியம்மாள் அங்கே வந்தாள்; அவள் வரவைக்கண்ட விசுவநாதன் பெருமகிழ்ச்சியடைந்தானாய் 'ஆச்சி, வாருங்கள், வாருங்கள், உங்களுக்கு நீடித்த ஆயுள்போலும்" என்று உபசார மொழி கூறுதலும் "ஏன், அப்படிச் சொல்லுகிறீர்கள்; நீடித்த ஆயுளுக்கு இருக்கவொண்ணாதென நாம் விரும்பும்போது, நீங்கள் அதற்கு மாறாக விரும்புகிறீர்கள்" என்று புன்னகையரும்பப் பேசிக்கொண்டு தலைவாசலில் வந்து ஏறுதலும், துறவியம்மாளின் இனிய குரலென்பது தன் காதிற்பட்ட மாத்திரத்தே உள்ளேயிருந்த விசாலாட்சி விரைந்து வந்து முகத்தில் ஆநந்தம் பெருக அந்த அம்மாளை உபசரித்து இருக்கச் செய்தாள்; அந்த அம்மாள் விசாலாட்சியைப் பார்த்து "தங்கைச்சீ, உம்முடைய கணவனார் நான் இங்கு வரக் கண்டமாத்திரத்தே, எனக்கு நீடிய ஆயுள் என்று வாழ்த்துகிறார், என்ன காரணம்" என்று கேட்க, விசாலாட்சி 'ஆச்சி, வேறொன்றுமல்ல, உங்களைக் காணவேணும் காணவேணும் என்று இவர்கள் காத்திருந்தார்கள்; உங்களிடம் இராமனை யனுப்பி உங்களை அழைப்பிக்க வேண்டுமென்றும் நேற்றுச் சொன்னார்கள்; இதற்கிடையில் நாங்கள் செய்த பாக்கியம், நீங்களாகவே இங்கு வந்துவிட்டீர்கள்; இதனையிட்டுத்தான் இவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாமென நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

"அதற்காகத்தான் நான் அப்படிச் சொன்னேன்" என்றான் விசுவநாதன்; "என்னைக் காணவேண்டுமென விரும்பியது எதற்கோ" என்று கேட்டாள் துறவியம்மாள்: "வந்துவிட்டீர்கள்தானே, இனியெல்லாம் விபரமாகச் சொல்லுகிறேன்" என்றான் விசுவநாதன்: இதற்கிடையில் விசாலாட்சி அந்த அம்மாளை வீட்டினுட் கூட்டிச் சென்றுவைத்தா ஆகாரம்அருந்தச்செய்தாள்; ஆகாரம் முடித்துக்கொண்டு அத்துறவியம்மாள் மீண்டும் விசுவநாதன் இருக்குந் தலைவாசற் பக்கஞ் [illegible] உபசரித்து [illegible] செய்தான்; "என்னைக் காணவேணுமென விரும்பியது எதற்கோ" என்று துறவியம்மாள் கேட்ப, "வேறொன்றுமல்ல, ஆச்சி, அந்த இரஞ்சிதத்தைப்பற்றி உங்களுக்கு எல்லாந் தெரியுமென என் மனைவி சொல்ல அறிந்தேன்; அந்தப் பெண்ணெனிலோ ஒரு உத்தமி; பொல்லாத ஊழினால் தன் பெற்றோரைப்பிரிந்து ஊர்விட்டுத் தேசம்விட்டுத் தன்னந்தனியளாய் அவள் அலைந்து திரிய நேர்ந்தது; அந்தக் கன்னிகை பட்ட கஷ்டங்களுட் சிலவற்றை நான் அறிவேன்; இப்பொழுது அந்தப் பெண்ணுடைய கதி யென்னவாயிற்றென்பதை அறிந்திலேன்: அவளும் நானும் உடன் பிறந்தார்போற் சிலகாலம் ஊடாடி வந்தேம்; ஆனால், இந்தப் பொல்லாத உலகம் அப்படி நாமிருவரும் ஊடாடுவதற்குந்தானும் இடங்கொடாது தூற்றத் தலைப்பட்டது; அதனால் அப்பெண்ணை நான் காணுதலும், அவளுடன் பேசுதலும், அவளுக்கு ஏதும் இயன்ற உதவி புரிதலும் இயலாதாயின; உங்களைப் போன்ற உண்மையான துறவிகளிடத்து உள்ளொன்று புறம்பொன்றாக ஊடாடுதல் முடியாது; ஆச்சி, உண்மையாக, அந்த உத்தமியை என் உடன்பிறப்பென மதித்து நடந்தேன்; அவளும் அப்படியே என்னை மதித்து நடந்தாள்: எப்பொழுது ஒருமுறையாயினும் என் தங்கையைப் பார்க்கவேண்டுமென ஆசைப்படுகிறேன்; விஷயம் முழுவதும் உங்கள் தங்கை விசாலாட்சிக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று விசுவநாதன் பரிவுடன் கூறினான்; இவற்றையெல்லாம் அவதானத்தோடு கேட்டுக்கொண்டிருந்த துறவியம்மாள் சற்றுநேரம் யாதும் வார்த்தையாடாதிருந்து பின்னர் விசுவநாதனைப் பார்த்து, 'அப்பனே, அந்தப் பெண் பலநாட்களாக என்னுடன் நெருங்கி ஊடாடினளெனினும், என்னிடத்தில் விசுவாசம் பாராட்டி நடந்தாளெனினும், சில அந்தரங்கமான கருமங்களை எனக்குச் சொல்லி என்னுடன் யோசித்தனளெனினும் தனக்கும் உமக்குமிடையேயுள்ள தூய தொடர்பை எனக்கு இற்றைவரையில் வெளியிட்டிலள்; பெண்கள் மனசை அளவிட முடியாதென்று ஆண்களே சொல்லுகிறார்கள்; எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ என்பது பழமொழி இரஞ்சிதத்தின் உள்ளக்கிடக்கையை நான் அறியேன்; ஒருபோது உங்களிருவருக்குமிடையே யுள்ள தூய தொடர்பைத் தான் வெளியிட்டால், பொல்லாத

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் இந்துக்கல்லூரி

### பெற்றேர் தினக் கொண்டாட்டமும், கட்டிட நிதிக்காகக் கதம்பக் கச்சேரியும்

சென்ற பங்குனிமீ 6ந் திகதி (22-3-46) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஷை கல்லூரியில் பெற்றேர் தினக் கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது. ஷை கல்லூரி ஆசிரியர்களது வேண்டுகோளுக்கு இயைந்து ஏறக்குறைய 200 பெற்றோர் வரை சமுகமாயிருந்து கூட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர். தேனீர் விருந்தின்பின், சங்கீத நிகழ்ச்சியும் அதன்பின் பிரதம ஆசிரியரது வரவேற்பு உரையும் ஆரம்பமானது. பிரதம ஆசிரியர் அவர்கள் தாம் அக்கூட்டத்தைக் கூட்டிய முக்கிய காரணத்தைச் செப்பமாக எடுத்துரைத்தனர். கலாசாலைக் கட்டிடத்தின் சிறியநிலையையும், கலாசாலையில் கற்கவரும் மாணவரின் தொகையின் படியேற்ற உயர்வையும்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியவகையால், பெற்றோரது பெரிய உதவியின் இன்றியமையாமையையும் அவர்களின் பொறுப்பையும் பற்றி அழுத்தமாகப் பேசினர்கள். திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்களும், திரு. ஆ. முத்துத்தம்பி யவர்களும் கலாசாலையின் வளர்ச்சி எவ்வகையிலும் சாலும் என்பதாக மிக உருக்கமாகப் பேசினர். அவர்களும் அவர்களின் ஒத்துழைப்பையும் அநுதாபத்தையும் ஆதரவையும் பற்றியே அதிகமாக வற்புறுத்தினர். வித்தியாதானத்தின் உயர்வைப்பற்றி திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் பேசினர்கள். அதன்பின் பேசிய ஆசிரியர் திரு. இ. கதையா அவர்களும் சுகாதாரப் பரிசோதகர் திரு. பொ. நடேசன் அவர்களும் ஷை கலாசாலைக் கட்டிடத்திலுள்ள குற்றம் குறைகளையெல்லாம் தெளிவாக எடுத்துக்கூறி அவற்றைப் பரிகரிக்கும் விதத்தையும் பற்றிப் பேசினர்கள். ஆசிரியர் திரு. ஆ. அமிர்தலிங்கம் அவர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கமொன்றின் இன்றியமையாமையைப்பற்றிச் சொல்லி "கொக்குவில் இந்துக்கல்லூரியில் குழுமியிருக்கும் பெற்றோர் ஆசிரியராகிய நாங்கள் இன்று ஒரு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை நிறுவுவதற்குத் தீர்மானித்திருக்கிறேம்" என்று பிரேரித்தார். அப்பிரேரணை முறைப்படி ஆமோதிக்கப்பட்டுச் சர்வசம்மதத்தோடு நிறைவேறிற்று. அதன்பின்பு "21 பேருக்குக் குறையாததும், பெற்றோர் ஆசிரியர் சங்கம் உருவமுறுவரை வேண்டியவற்றை வேண்டியாங்கு ஆற்ற அதிகாரமுள்ளதும் இன்னும் இக் கலாசாலை விஷயமாக அநுதாபமுள்ள மற்றையோரையும் உடனே சேர்த்துக்கொள்ளக் கூடியதுமான ஓர் அதிகாரசபை தெரியப்படவேண்டும்" என்ற பிரேரணையும் சர்வமனதாக ஏற்கப்பட்டது. அதன்பிரகாரம் அச்சபை அங்கத்தினரும் அன்றே தெரியப்படலாயினர். நன்றியுரையோடு கூட்டம் 8 மணியளவில் முடிவெய்தியது.

ஷை கலாசாலைக் கட்டிட நிதிக்காக அடுத்தவாரம் 29-3-46 வெள்ளிக்கிழமை பிற்பகல் 7 மணியளவில் ஷை கட்டிட முன்றிலில் அழகுற அமைந்த அரங்கில் ஓர் சிறந்த கதம்பக்கச்சேரி நிகழ்ந்தது. எதிர்பாராதவிதம் கட்டிடமுன்றில் குழுமியிருந்தது; காட்சிகளும் கவின்பெறவிருந்தன. அனைவோருக்கும் திரு. பொ. நடேசன் அவர்கள் நன்று கூறினர்கள். நன்றியுரையில் அவர்கள் கலாசாலையின் கட்டிட நிதிக்காக ஆசிரியரும் பெற்றோரும் ஊராரும் எவ்வளவில் முயலவேண்டு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# அந்நியரைச் செல்வராக்கி அடிமைகளாகிறேம்

## பொருளாதாரத் துறையில் எம் பிற்போக்கான நிலை

### நீர்வேலியில் திரு. குமரப்பாவின் பிரசாரணம்

(மது நிருபர்)

"நமது நாட்டின் வறுமைக்கு மூல காரணம் சுதேச கைத்தொழில் அபிவிருத்தி இன்மையே. நமக்குத் தேவையான சாமான்களுக்குப் பிற நாட்டினரை எதிர்பார்க்கின்றேம். நமது நாட்டின் இரத்தம் பிழிந்த பணம் பிற நாட்டுக்கு ஓடுகிறது. மூலப் பொருள்கள் இல்லாத பிற நாட்டினருக்கு நமது மூலப்பொருள்கள் அனுப்பப்படுகின்றன. அவர்கள் நமது மூலப் பொருள்களைக் கொண்டு கைத்தொழிலை அபிவிருத்தி செய்து அவற்றிற்குக் கூலி முதலியன விதித்துத் திரும்ப நமக்கு விலைக்குத் தருகிறார்கள். எனவே பிற நாட்டினர் நமக்குத் தரும் பொருள்களின் சார்பாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றேம். பிற நாட்டினரைப் பணக்காரராக்குகிறேம். நமது சீவியத்தின் உபகரணங்களுக்கும் பிற நாட்டினரை எதிர்பார்ப்பதினாலே நாம் அரசியலடிமைகளானேம். ஆகையால் நாம் அரசியல் அடிமைத்தனத்தினின்றும் விடுதலை பெறவேண்டுமானால் நமது தேவைகளுக்குரிய பொருள்களை நாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். நமது நாட்டுப் பொருள்களையே நாம் வாங்கவேண்டும். அன்னிய நாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது. நமது பணம் நமது நாட்டிலேயே தங்கிவிடும். பஞ்சம் பிணியகலும். உங்கள் தேவைகட்குரிய பொருள்களை நீங்களே உற்பத்தி செய்யவேண்டும். இதுவே நான் உங்களுக்குச் சொல்லித்தரத்தக்க மந்திரமாகும். இங்குள்ள வாலிபர்கள் இந்த மந்திரத்தைச் செயலிலே கொண்டுவருவார்களாக." என்று அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்க அமைப்பாளரும் சரித்திரப் புகழ்பெற்ற Dr. J. C. குமரப்பா M.A., B.Sc., Ph.D. அவர்கள், நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை மண்டபத்தில் நிகழ்த்திய பிரசாரத்திற் குறிப்பிட்டார்.

16-3-46ல் இரவு 7 மணியளவில் மேற்படி வாசிகசாலை நிர்வாகசபையாரால் ஓர் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்துக்கு, நீர்வேலி, கோப்பாய், உரும்பராய், ஊரெழு, சிறுப்பிட்டி, புத்தூர் முதலிய கிராமங்களில் இருந்து பல மக்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் கு. சிற்சபேசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீமான். J. C குமரப்பா அவர்கள் வாசிகசாலை மைதானத்துக்கு வந்தவுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமானது உருவப்படத்துக்கு வணக்கம் செலுத்தினர். பின்னர் வாசிகசாலையைப் பார்வையிட்டார். அதன்பின்னர்க் கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. திரு. தீ. சி. முருகேசு ஆசிரியர் அவர்கள் திரு. குமரப்பா அவர்களை வரவேற்றுப் பேசினர். "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற பெரியார்கள் நமக்கும் இந்திய வுக்குமுள்ள நெருங்கிய தொடர்புகளைச் செய்கையிலேகாட்டியுள்ளார். அந்தத் தொடர்புகளை ஸ்திரமாக்குவதற்காக திரு. குமரப்பா போன்ற பாரதநாட்டுப் பெரியார்களின் வரவு அவசியமாக இருக்கிறது" என்று கூறியுள்ளார். பின்னர் தலைவர் முன்னுரையாக ... ரப்பாவையில் இறங்கிவிட்டனர். அவர்களுக்குச் சரியான வழி காட்டுவதற்குப் பாரதநாட்டில் இருந்துதான் பெரியார்கள் வரவேண்டும். அனேக நூற்றாண்டுகளுக்கு முன் தொடக்கமாக பாரத நாட்டுக்கும் ஈழத்துக்கும் அதிக தொடர்புகள் உண்டு. அன்று தொடக்கம் காலத்தோறும் பெரியார்கள் எங்கள் மத்தியில் வந்து அரிய தொண்டுகள் செய்துவந்தார்கள். அதேபோல பிரசாரகர் அவர்களும் எங்கள் மத்தியிலே வழிகாட்டியாக வந்துள்ளார். அவரது போதனைகள் எங்களுக்கு நல்ல மருந்தாகும்" என்று கூறியுள்ளார், பிரசங்கப்படியாக திரு. J. C. குமரப்பா அவர்கள் பேசியதாவது: "இங்குள்ள வாலிபர்கள் தேசியத் துறையில் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைப்பிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். உணவுக்கும் உடைக்கும் இந்நாட்டவர்கள் பெருங் கஷ்டப்படுகின்றார்கள். இந்நாட்டில் இருந்து பருத்தி ஏற்றுமதிசெய்யப்பட்டதாம். அந்தநிலைமை ஏன் இப்பொழுது இங்கு இல்லை. இதற்கு சோம்பலே காரணம். பருத்தியை விளைவித்து ஓய்வு நேரத்தில் நூலை நூற்று உங்கள் தேவைக்குரிய துணிகளை ஆக்கிக் கொள்ளுங்கள். 'மில்' துணிகளை வாங்குவதினால் உங்களது பணம் யப்பான், அமெரிக்கா, பிரிட்டன் முதலிய தேசங்களுக்குப் போய்விடுகிறது. நான் இன்று யாழ்ப்பாணத்தில் கடற்கரைப் பக்கம் போயிருந்தேன். அங்கு சவர்க்காரக் கட்டிகள் வந்து குவிந்திருக்கின்றன. அதனால் உங்கள் பணம் இந்தியாவுக்குப் போய்விடுகிறது. உங்களுக்குத் தேவையான ஒடிகளை நீங்களே இங்கு உற்பத்தி செய்தாலென்ன? கிராமத்தில் நித்திய உபயோகத்துக்கு வேண்டியவற்றையெல்லாம் அவ்வக் கிராமவாசிகள் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். பிறநாட்டில் இருந்துவரும் பொருள்களை எங்கள் நாட்டுப் பணத்தைக் கொடுத்து வாங்கி அவைகளை உபயோகித்தல் ஓர் மேம்பாடென நினைக்கும் எங்கள் கொடிய எண்ணங்களும் செய்கைகளும் இல்லாதொழிந்தாலன்றி நாங்கள் முன்னேற முடியாது. பிறநாட்டுப் பொருள்களை மதித்தல் பிற நாட்டவரைப் பணக்காரராக்குவ தல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. எங்களது சோம்பலும் அறிவின்மையும் பிற நாட்டினரைச் செல்வராக்குகின்றன பலவிதமாகப்பேசுவதிலும் பார்க்க சிறிதளவேனும் எங்களுக்கு வேண்டிய பொருள்களை நாமாக ஆக்கிக்கொள்ளவேண்டும். நமது நாட்டின் வறுமைக்கு மூலகாரணம் சுதேச கைத்தொழில் அபிவிருத்தியின்மையே....." பின்னர், திக்கம் திரு. செல்லையாபிள்ளை அவர்கள் தங்களது நீடித்த அனுபவத்தைக் கொண்டு குறிப்புரை கூறினர்கள். ஈற்றில் தலைவர் முடிவுரையில் கூறியதாவது:—"எங்களுக்கு இன்று கிடைக்கப்பெற்ற போதனைகள் மகத்தானவை. இங்கு வாசிகசாலை நிர்வாகசபையினர் நல்ல தொண்டர்கள். முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் சிலவகைகள் ஏற்படுந்தான். ஆனால் அப்படிப்பட்ட முட்டுக்கட்டைகளினால் முன்னேற்றம் அடியோடு தடைப்படமாட்டாது. உதாரணமாக, 'சோறிறாங்கு' என்ற வியாதியினால் மனிதன் இறக்கமாட்டான். ஆனால் சொறிசிரங்கு மனிதனுக்கு வீண் சிரமத்தைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும், நீங்கள் இந்தியாவைப் பாருங்கள். தர்ம சுதந்திரத்துக்காக 'காங்கிரஸ்' ஒன்றே பாடுபடுகிறது. சில சில்லறைக் கட்சிகள் முட்டுக்கட்டைகள் போடுகின்றன. எனினும் அம்முட்டுக்கட்டைகளினால் சுதந்திரம் கிட்டாமல் விடப்போவதில்லை. ஆகையால் சில்லறைத் தடைகளைப் பொருட்படுத்த கூடாது. பிரசாரகர் அவர்களது அரிய போதனையினால் நாங்கள் முன்னேறுவோம் என்பது திண்ணம். இப்படிப்பட்ட பாரதநாட்டுப் புதல்வர்கள் வழிகாட்ட நாங்கள் அவ் நல்வழியிற் செல்வோமாக. இதனால் பாரத நாட்டுக்கும் எங்களுக்கு மிடையில் உள்ள நட்பு விருத்தியடைந்து வருகிறது" என்று கூறிமுடித்தார். ஈற்றில் திரு. க. இராசதுரையவர்களால் நன்றி கூறியபின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இரவு 10 மணியளவில் இனிது நிறைவேறியது.

## சித்திராபூரணை

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

சித்திரை மாதம் தமிழ் மாதங்களுள் முதன்மையானது. இம்மாதப் பூரணைத் திதியில் சித்திரை நட்சத்திரம் சேரும் இந்நன்னாளில் விரதமிருந்து பிதிர்க்கடன் செய்தல்நலம். இந்நாளில் சித்திரகுப்தர் விரதமும் அனுட்டிக்கப்படுவதுண்டு, சித்திராபூரணையைத் தீர்த்தநாளாகக் கொண்டு மதுரை, திருவையாறு, கும்பகோணம், சீகாழி, திருக்கழுக்குன்றம் முதலிய சிவதலங்களில் உற்சவம் கொண்டாடப்படுவது உலகப் பிரசித்தம். சொக்கலிங்கப் பெருமானை இந்திரன் இத்தினத்தில் பூசித்துத் தனக்குச் சேர்ந்த துன்பத்தைப் போக்கிக்கொண்டான. இதனைத் திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலத்தால் அறியலாம், மதுரையில் சித்திரை வீதியென்றொரு தெரு இருப்பதும் இங்கே நோக்கற்பாலது,

இப் புனித நாளின் சிறப்பைப் பின் வரும் திருவிளையாடற் புராணத் திருவிருத்தங்கள் நன்கு கூறும்.—

இருதுவிற் சிறந்த வேனிலு மதியா
  றிரண்டினிற் சிறந்தவான் றலைமும்
பொருவில் தாரகையிற் சிறந்த
  சித்திரையுந் திதியினிற் சிறந்தபூ
    ரணையும்

மருவு சித்திரையிற் சித்திரைதோறும்
  வந்துவந் தருக்கியோர் வருடந்
தெரியுநாள் பூசனை புரிந்து
  மைந்தருஞ் செய்தவர்ச் சனைப்பய
    னெய்தும்

துறக்கநா டணைந்து சுத்தபல் போகம்
  துய்த்துமேல் மலமறு பாகம்
பிறக்குமா ன்முகன்மான் முதற்பெருந்
  தேவர் பெறும்பதத் தாசையும பிற
    வும்

மறக்கவாம் வீடுவழங்குது மென்ன
  வாய்மலர்ந் தருளினான் கருணை
சிறக்கநால் வேதச் சிகைபெறு மணிச்
  சிவபரஞ் சுடர்விடை கொடுத்தான்,

ஒவ்வொரு மாத பௌர்ணமியிலும் சிவபெருமானுக்கு ஒவ்வொரு அபிஷேகம் நடப்பது வழக்கம், சித்திரை பூரணையில் மருக்கொழுந்து அபிஷேகம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்விசேஷ தினத்தில் யாமெல்லாம் சிவபிரானைப் போற்றி வணங்குவோமாக,

வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானம் கெட்ட வாழ்க்கை

## அந்நிய பாடசாலைகளில் நம்மவர் செய்யும் கபடங்கள்

(ஓர் நிருபர்)

செயற்கருஞ் செயல்களைச் செய்த பெரியோர்கள் பலர் தோன்றிய நாடு நம்நாடு. தர்மம் இது, அதர்மம் இது என்று பலாபலன்களால் நன்கு பகுத்துணர்ந்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டிப் பரப்பிய தமிழ் வாணிகன் வாழ்ந்த நாடு நம்நாடு. தர்மங் குன்றி அதர்மம் தலையெடுக்குங் காலத்து நான் தோன்றி அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டுவேன் என்று கிருஷ்ண பரமாத்மா கீதை வாயிலாகக் கூறுகின்றார். பிறசமயத்தவர்களின் தீமைகளை ஒழித்து உண்மைச் சமயமாகிய சைவசமயத்தை நிலைநாட்டுவதற்கு அவ்வக்காலத்துச் சமய குரவர்கள் தோன்றினார்கள். அதுபோலவே மிஷனரிமாரின் ஆதிக்கம், அதிகாரம், அட்டூழியம் மிஞ்சியிருந்தபோது, நாவலர் பெருமான் தோன்றி அவர்களையடக்கிச் சைவ சமயத்தை நிலைநாட்டினார். அவர் பூதவுடம்பை நீத்துவிட்டகையுடன் பதுங்கியிருந்த மிஷனரிமார் தங்கள் ஆதிக்க வேட்டையை நடத்தத் தொடங்கினார்கள். 'தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் தானே' என்பர். காட்டிய வழியைப் பின்பற்றிச் சில சைவச்சபைகள் கண்விழித்திருக்காவிட்டால் நம்மவர்பாடு அதோகதிதான். இச் சபைகளுக்கு யாவரும் நன்றிகூறக் கடமைப்பட்டவர்களே; மிஷனரிமாரின் பாதுகாப்பிலுள்ள பாடசாலைகளில் சைவப்பிள்ளைகளைப் படிக்க விடுவதிலுள்ள பெருந்தீமையை நம்மவர் இன்றும் உணர்வதில்லை. பால்மணம் மாறாத பளிங்கு போன்ற உள்ளத்தையுடைய பச்சிளங் குழந்தைப் பருவத்திலேயே அந்நிய மதத்தவர்களின் பிறசமய தூஷணையும், தப்போதனையும் ஏற்படுமானால் அவர்களுக்கு வேறு என்ன செய்யமுடியும். 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டமாவதுபோல்', வேறு விஷயமொன்றும் விளங்காது அவர்களது வாக்கே அமுதவாக்காக இருக்கும். அவர்களது அமுதவாக்கு சிவதூஷணை தான். தம சமயச் சாதகத்தை விளம்பரித்தற்குப் பாடசாலைகளை தக்க வியாபாரஸ்தலமாகக் கண்ட மிஷனரிமார் பிரபல இடங்கள், சந்திகள், தெருத்திண்ணைகளிலெல்லாம் பாடசாலைகளை ஸ்தாபித்து ஊக்கமாகப் பாடுபட்டு உழைப்பார்போலக் காட்டி தம சமய போதனைகளை யூட்டிவரலானார்கள். 'இருளில் போட்டுச் சுருப் பிடிப்பது' போல் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக உதிரத்தை உறிஞ்சும் ஓநாய்கள் போன்றிருந்தார்கள். உதிரத்தை உருசி கண்ட வாய் உடலைச் சும்மா விடுமா? மிஷனரிமாரின் சகாயமில்லாவிட்டால் சனங்கள் கல்வியறிவற்ற காட்டுமிராண்டிகளாகத்தான் போயிருப்பார்களென்று கூறி அழுது ஒத்தூதுந் தாளம் போட்டார்கள், போடுகின்றார்கள், பரிதாபப்படுகின்றார்கள். 'ஆடு நனைகிறதைக் கண்டு உதிரம் உருசி கண்ட ஓநாய் அழாமலிருக்க முடியுமா?' என் இவர்களும் இவர்களைப் பின்னே தூண்டி சத்திரப்படும் மிஷனரிமாரது செலவிலிருந்தே கல்வி கற்று உத்தியோகம் பெற்று உண்டுடுத்து உல்லாசமாய்க் காலங் கழித்தவர்களல்லவா? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது முறையல்லவே, 'செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும் கருமமும் தருமமும்' என்று கர்ணன் கூறவில்லையா? வயிற்றுப் பிழைப்புக்காகச் சமயத்தை விற்ற இவர்கள் கர்ணனைப் போலத்தானே நடிக்கவேண்டும்.

பலசமயங்களினதும் அடிப்படையான மூலாதாரக் கொள்கை ஒன்று. கடவுள் ஒருவர்தான், எம்மதத்திலுள்ளவர்களும் அம்மத வாயிலாகக் கடவுளை அடையலாம் என்பதையறியாது அடிக்கடி மாற்றிப்போட்டுக் கொள்ளும் சட்டைகள்போலச் சமயத்தை அமைத்து நடக்கும் அசத்தியவான்கள் எத்தனைபேர் நம்மவருள் இலைமறை காய்போல தலைமறைந்திருக்கின்றார்கள். இன்னும் எத்தனைபேர் சிவநாமங்களையே தங்கள் திருநாமங்களாகப் பெற்றிருந்தும் வயிற்றுப் பிழைப்புக்காகச் சமயத்தை விற்று இன்னுமொரு தலைப்பெயரும் பெற்று இருபக்கமும் பாடும் கன்னைக் கோத்திகள்போல் நம்மவருள் இருக்கிறார்கள். தற்காலத்திய கல்வித்திட்டத்தை எதிர்த்து நிற்கும் சில குறுகிய மனப்பான்மையுள்ளவர்களோடு கூடிய இவர்கள் 'இருதலைக்கொள்ளி இடைப்பட்ட எறும்பு போல்' திண்டாடுகிறார்கள். இருதலைப்பேர் பெற்றதற்குப் பலன் கைமேற் கிடைக்கிறது போலும். வயிற்றுச் சோற்றுப் பிழைப்புக்காக எத்தனைபேர் வழியிற் பூசிய திருநீற்றை யழித்துவிட்டுப் போய்க் கற்பிக்கும் பாடசாலைகளிற் படிப்பித்துக்கொண்டு தலைமறைந்து உலாவி வருகின்றார்கள்.

பொரியாவை மெச்சிய பொக்கை வாயன்போல் எத்தனைபேர் மிஷனரிமார்களோடு சேர்ந்து ஒத்தூதித் தாளம்போட்டுப் பாடசாலைகளிலுள்ள கள்ளங் கபடமற்ற சைவப்பிள்ளைகளை சாதுரியப் பூனைகள்போல கிறிஸ்தவர்களாக்க முயலுகின்றார்கள். சைவசமயத்தை இகழுகின்றார்கள். பரம்பரைச் சுத்த சைவக் குடும்பத்திற் பிறந்தவர்கள் எத்தனைபேர் பாழும் வயிற்றுக் கொடுமையினால் போலும் தங்கள் குடும்பம் முழுவதையுமே அந்நிய சமயத்திற் கடிமைகளாக்கி மானங்கெட்ட வாழ்வு வாழ்ந்து டாம்பீகத் தாண்டவமாடுகின்றார்கள். 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமானன்னார்' வாழ்ந்த சீரிய நாட்டின் பழிகாரர்போலும். தம் கைகாலிருக்கவும் கடவுள் கொடுத்த அறிவிருக்கவும் கேவலம் வயிற்றுப்பிழைப்புக்காகவா சமயத்தை விற்க வேண்டும். மானத்தை இழக்க வேண்டும். வெள்ளிக்கிழமை சைவக் கோயிலும், ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்கக் கோயிலுமாக எத்தனைபேர் இரு தோணியிற் கால்வைத்துக் கரையேற முயலுகின்றார்கள். சைவாபிமானமுள்ள கனவான்களே, சீமான்களே, புண்ணிய சீமான்களே, பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே எங்கள் மானத்தைக் காத்துக்கொள்ள முயலுங்கள். கண்விழித்தெழுங்கள். ஆவன செய்யுங்கள். வருங்கால உலகை நிலைநிறுத்த வல்ல வீர இரத்தினங்கள் போன்ற உங்கள் செல்வக் குழந்தைகளின் மனத்தில் உண்மைச் சமய அறிவை அத்திவாரமிடுங்கள், அந்நிய பாதவெள்ளம் எனாக்காது காப்பாற்றுங்கள். இவர்களுக்கெல்லாம் நல்லறிவு புகட்டிச் சீரிய நெறியைக் கடைப்பிடித்தொழுகும் வண்ணம் எல்லாம் வல்ல இறையருள் முன்னிற்பதாக.

## கொக்குவில் இந்துக்கல்லூரி

3ம் பக்கத் தொடர்ச்சி

மென்று குறிப்பிட்டார்கள். அக்கிராமத்தில் பணக்காரராய் உள்ள பெரியார்கள் இந்தக் கைங்கரியத்தில் பெரிய மனது வைத்து முன்வர வேண்டுமென்றும் சகல உதவியையும் செய்து அக்கலாசாலையை வளர்க்க வேண்டுமென்று பேசினர். சபை கச்சேரி 10-30 மணியளவில் முடிவெய்தியது.

கடிதம்.

# அரசியலில் தமிழ்

## அதனால் ஏற்படும் நன்மைகள்

(திருநெல்வேலி, திரு. வ. சோமசுந்தரம்)

ஆராய்ச்சியாளர் கூற்றின்படி பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் முப்பெருவேந்தர் அரசியல்மொழி தமிழேயாகும். இத்தமிழ் 4440, 3700 1850 ஆண்டுகள் முறையே தலை இடை கடைச் சங்கங்களில் ஆட்சி பூண்டு பூரணமடைந்தது. அரசியலுக்குரிய வார்த்தைகள் தமிழ்மொழியில் காணப்படவில்லையென்று தாய் அன்பு அற்ற ஓர்தமிழ்மகன் வீரகேசரியில் வரைந்துளதை கண்டேன். இவர் அறியாமைக்குக் காரணமென்னே? மேற்கு கோளத்தையும் பாண்டிநாட்டரசர் கண்டனரெனப் பல சான்றுகளுண்டு என்று காலஞ்சென்ற பெரியோர்வாய்க் கேட்டுள்ளோம்.

அகத்தியர் தமிழ்மொழியை நன்கு பயின்று வேண்டிய ஆதாரங்களைப் போதவும் தேடிவைத்தனரென்பது பொய்யாகாது. அந்த முனிபுங்கவர் வைத்தியம் பூரணமானதென்று அறிஞர் அருமை கண்டனர். அறுபத்து நான்கு வகையில் அறிவைப் பரப்பிய தமிழ்மொழிக்குப் பதப்பஞ்சம் உண்டெனல் அறிவினர் கூற்றாகாது. விடாமழையில் கறுப்புச் சட்டை மாட்டி நடக்கும் மனிதன் வெப்பமுணர்வான் போல விஷமமே எனல் பொருந்தும். பலமொழிகளிலும் மக்கள் அறிவைச் செப்பஞ்செய்து விளக்கி உயர்நிலை கண் உய்க்குந் திறத்தனவாகிய நுண்பொருள் நூற்கள் அமைந்த சிலமொழிகளில் தமிழ்மொழியே தனிச்சிறப்புடைத்தென்று அறிஞர்கள் கூறுகின்றனர். இத் தமிழ்மொழிக்கு ஆதி அந்தமிலாத ஆதி என்று கற்பச்சுவடுகளால் வெளியாவதென்று ஆராய்ச்சியாளர் சொல்வர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் மேல்நாடுகளிலும் பெருங் கடல் கடந்து வாணிபம் செய்த தமிழ்ப் பதங்களை விதைத்து வளர்ந்த தமிழ்மொழியில் சொல்வளம் இல்லை என்பது மதவுண்டவன் பதிபோலும். மொழிவளம் நிறைந்து தெளிந்து ஒழுங்காயுள்ள பாஷைகளில், தமிழ்மொழியே மிகவும் சிறந்ததொன்றும் எனப் பல புறமொழியாளர் வியந்துளார். சில நூற்றாண்டுகளின் முன் தோன்றி வளர்ந்த வியாபாரமொழியிலுள்ள மதிப்பு தன் மொழியில் அற்றவன் தமிழனா?

அரசியல் முதலிய எத்துறையிலும் தமிழை வழங்க உரிய பதங்கள் கடன்படவேண்டி வராது. போருக்குக் கமிட்டியில் அங்கம் பெற்றிருக்கும் திருவாளர் செல்வன் சு. நடேசபிள்ளை மாறுபாற அபிப்பிராயங்களைக் கண்டு நகைப்படி ஒதுக்குவர் என்றே நாம் நினைக்கிறோம். பாஷா பிரச்சினையைக் குறித்து வீரகேசரியில் வெளிவந்த கடிதத்தின் கருத்து நாமபக்களுக்கு உடன்பாடாயிராது. இருமொழியிலும் மகா நிபுணத்துவமுடைய இந்தியப் பெருமக்கள் இதனைக்கண்டு வியப்புறுவர். இலங்கையர், தேசம், பாஷை, சாதி முதலிய எல்லாப்பற்றும் துறந்தவர் எனறே மூன சில இந்தியப் பெரியோர் என்னிடம் சொல்லக் கேட்டிருக்கிறேன்,

அரசியலில் கலந்து சுகபோகம் பெறுவோம் என்று, தாய் மொழியை ஒதுக்கி அன்னியமொழியைக் காதலித்தவர், தாய்மொழி அதிகாரத்திலவர அச்சம் காரணமுண்டு. தாய்மொழி வழங்க, பொதுமக்கள் இலகுவாக விஷயங்களை அறிந்து கொள்வர் என்று பயப்பட்டவர்களை அறிவேன். எந்த மொழி வழங்கினாலும், தன் கடமையை சரியாய்ச் செய்பவர் ஒழுக்கமுடையவர் அஞ்சவேண்டிய அவசியமே இல்லை. தமிழர் பல்லாயிரவருடம் அட்சி செய்தார்கள், அன்னிய மொழியில் அல்ல.

தாய்மொழியில் சகல வேலைகளும் நடந்தால் மக்கள் அதிக நன்மைகளோடு விருத்தியாவர், அவை வருமாறு:-

1. இருபத்தைந்து வருடம் வரை வருந்தி கற்ற அறிவை, தாய்மொழியில் ஐந்து வருடங்களுக்குள் பெறலாம். (சுயமொழியில் படித்து ஆங்கில வைத்தியப் பட்டம் பெற்ற இந்தியர் சிறந்தோராய் விளங்குவது)

2 எந்த ஏழையும் தேர்ச்சி பெறலாம்.

3 உத்தியோகர் இம்மைமறுமைப் பயன்பெற்று உய்தி பெற இயங்கிய மக்கள் வழிப்படத் தூண்டப்பெறுவர்.

4. திருக்குறள், திருமந்திரம் முதலிய அருமை பெரும் நூற்கள் படிக்க அறிவு பெறுவர்.

5, லஞ்சப்பேய் ஊர்விட்டோடும். பொதுமக்கள் அரசியலறிவும் பெறுவர்; கற்றுக் குட்டிகள் ஏமாற்றுக் குறையும்.

6. நீதிதலங்கள் நியாயம் செய்ய ஏதுவுண்டாம்; நியாயதுரந்தாரிடம் வாதி பிரதிவாதி நம்பிக்கைகொள்வர்; நீதிபதிக்கும் வாதி பிரதிவாதிக்கும் இடை ஆட்களின்றி உண்மை கண்டு நடுநிற்க உதவியாயிருக்கும். மொழிபெயர்ப்பாளர் வேதனம் மிச்சம், காலங்கடத்துதல் குறையும்.

7. அதிக செலவின்றி மக்கள் நீதி பெறுவதோடு காலத்தை வீணாக்குவது நின்றுவிடும்.

உடனே தாய்மொழியை அரசியல் முதல் எத்துறையிலும் வழங்குவிக்க, மக்கள் அதிகாரிகளைத் தூண்ட முன்வருவார்களாக! இந்த நகரத்தில் நன்மைக்கும் தீமைக்கும் எதிர்ப்பு உண்டு. பகுத்தறிவுடையோர் அறிவர்.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## சனி ஏப்ரல் 6

காலை: 7.15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் ராமசுப்பய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி எம் ஹரிஜவல்லி பாட்டு 8-30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 எஸ் ராமசுப்பய்யர் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பல்லடம் சஞ்சீவராவ் இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆர் கே பார்த்தசாரதி பாட்டு 2.30 முடிவு

மாலை 5 டி எம் ஹரிஜவல்லி பாட்டு 5-40 திருவரங்கத்தந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 ஆர் கே பார்த்தசாரதி பாட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 7.15 இன்றைய உணவு நிலைமை 7.30 தமிழில் செய்திகள் 7-45 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 தேவாரம் 10 ஜனசவேலை இசைத்தட்டு 10 30 முடிவு.

## ஞாயிறு ஏப்ரல் 7

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே என் பக்கிரிசாமி பாட்டு 8-30 இசைக் கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12.30 ஷவிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2 05 மாலதி சுப்பிரமணியம் வீணை 2-30 முடிவு.

மாலை: 5 கே என் பக்கிரிசாமி பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 6.30 கிராம நிகழ்ச்சிகள் 7 மாலதி சுப்பிரமணியம் வீணை 7.15 தேசவளர்ச்சிக்கு சேமிப்பு 7.30 தமிழில் செய்திகள் 7-45 பல்லடம்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# இந்திய அரசியல்

### மாகாணத் தேர்தல்களின் முடிவு

இந்திய மாகாணத் தேர்தல்களின் முடிவு ஏறக்குறைய வெளியாகிவிட்டது. 11 மாகாணங்களில் எல்லைப்புறம், மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பம்பாய், சென்னை அசாம், ஒறிஸா, பீகார் என்னும் மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி மிகப் பெரும்பான்மையான வாக்குகள் பெற்றுள்ளது. பாஞ்சாலத்தில் காங்கிரஸ், யூனியனிஸ்ற்கட்சி, சீக்கியரின் அகாலிக்கட்சி என்னும் மூன்று கட்சிகள் கொண்ட மந்திரசபை ஏற்பட்டு இருக்கிறது. சிந்து மாகாணத்தில் அந்நியராகிய ஐரோப்பிய அங்கத்தவர் உதவியாலும் தயவாலும் முஸ்லீம் லீக்கட்சி அதிகாரம் செலுத்துகிறது. ஆனால் அதன் ஆயுள் ஸ்திரமாயில்லை. வங்காளத்தில் மாத்திரமே முஸ்லீம் லீக்கட்சி சற்றுப் பலமுற்றதாக விருப்பினும் அங்கேயும், அது ஐரோப்பிய அங்கத்தவர் ஒத்துழைப்பையும் தயவையும் நாடவேண்டி யிருக்கிறது.

### "நான் இந்தியன் அல்ல"

பாரதநாட்டைத் துண்டு போட்டு, முஸ்லீம்களிடம் "பாகிஸ்தானை ஒப்படைக்கவேண்டும் என்று பிடிவாதஞ் செய்யும் மிஸ்றர் மகமதலி ஜின்னு, இன்று தாம் இந்தியன் அல்ல என்று ஓர் பத்திரிகை நிருபரிடம் கூறியதாகச் செய்தி வந்துள்ளது. 'இந்தியா ஓர் தனிச்சாதியினர் வசிக்கும் நாடு அல்ல. பலசாதியினர்வசிக்கும்பிரதேசம். முஸ்லீம்களாகியநாம் சிறுபான்மையினரல்ல; நாம்ஓர்பெருஞ்சாதியினர்; எமக்கெனஓர்இராச்சியம்வேருக வேண்டும்; நாம் ஹிந்துக்களுடன் ஓர்போதும் ஒத்து வாழ முடியாது" என்று தமகூற்றை விளக்கி மிஸ்றர் ஜின்னு ஓர் பத்திரிகை நிருபருக்குக் கூறினர்.

### மந்திரிசபை தூதுக்கோஷ்டி

இந்தியா மந்திரியான பெதிக் லோறன்ஸ் பிரபு, கடற்படை மந்திரி மிஸ்ரர் A. V. அலெக்சாந்தர், சேர் ஸ்டாபோட் கிறிப்ஸ் என்பவர்களைக் கொண்ட பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டி இந்திய அரசியற் பிரச்னை விஷயமாக ஓர் பெருந் தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறது. இந்திய நாட்டுக்குச் சுபராச்சியம் வேண்டும் என்பதில் இப்போது எவர்க்கும் அபிப்பிராயபேதமில்லை. ஆனால் அதனை எந்தமுறையிற் கொடுப்பது என்பதில் பெரிய இடையூறுகள் ஏற்படுகின்றன காங்கிரஸோ, இந்தியா ஒரேநாடு அதனைப் பிரிக்க முடியாது என்கிறது. முஸ்லிம்கள் பெரும்பான்மையோரின் செல்வாக்கைப் பெற்ற முஸ்லிம்லீக்கோ, பாரத நாட்டை ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் என்று துண்டாடவேண்டும் என்று பிடிவாதம் சாதிக்கிறது. இதற்கிடையில், முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான் கொடுத்தால் தங்களுக்குச் "சீக்கியஸ்தான்" வேண்டும் என்று சீக்கியர் ஓர்பக்கம்கிளம்புகின்ருர்கள். ஏன், நமது சுயமரியாதைப் பெரியார் ஈரோடு ராமசாமி நாயக்கர் திராவிடஸ்தான் வேண்டுமென்கிருர். இப்படியே 'ஸ்தான்'கள்பெருகிக்கொண்டே போகும். இந்த நிலையில் பிரிட்டிஷ் மந்திரிசபைத் தூதுக்கோஷ்டி நிலைமைச் சமாளித்து எல்லார்க்கும் உவப்பதாகும் ஓர் திட்டத்தைத் தயாரிக்குமா? பிரிட்டிஷ் இராஜதந்திரதுக்கும் இந்திய அரசியல் ஞானத்துக்கும் இது ஓர்பெரிய சோதனைக்காலம்.

### காந்தி - ஜின்னு சந்திப்பு

மகாத்மா காந்தியையும் மிஸ்ரர் ஜின்னுவையும் சந்திக்கவைத்து முஸ்லீம் பிரச்சினையை ஓர் சமரச முடிவுக்குக் கொண்டுவர, மந்திரிகள் கோஷ்டியில் ஒருவராய சேர். ஸ்ராபோட் கிறிப்ஸ் முயற்சி செய்வதாக ஓர் செய்தி கூறுகிறது. சேர். கிறிப்ஸ் மிஸ்ரர் ஜின்னுவையும், மகாத்மாவையும் சந்தித்துப் பேசியுள்ளார். இரு கட்சியினர்க்கு மிடையே சமரசம் ஏற்படுத்துவது அசாத்தியமல்ல என்பது சேர். கிறிப்ஸின் கருத்து.

### சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரி

ஸ்ரீஇராஜகோபாலாச்சாரியார் மாகாணச் சட்டசபைவியவகாரங்களில் இருந்துவிலகிவிட்டபடியால், சென்னை மாகாணச் சட்டசபையில், பிரதம மந்திரியாக யார் நியமிக்கப்படுவது என்ற ஓர் பிரச்சினை இப்போது கிளம்பியிருக்கிறது. கேரள காங்கிர தலைவர் ஸ்ரீ மாதவமேனன், தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ காமராஜநாடார் ஆந்திரநாட்டுத் தலைவர் ஸ்ரீபிரகாசம் என்னும் மூவரில் ஒருவர்க்குப் பிரதம மந்திரிப்பதவியை, காங்கிரஸ் அதிகாரபீடம் அளிக்குமா? அல்லது இந்த மூவரை ஒழிந்த இன்னெரு பிரபல காங்கிரஸ்வாதிக்கு அப்பதவி யளிக்கப்படுமா? இவ்விஷயமாக ஸ்ரீ V. V. கிரி பிரதம மந்திரியாக நியமிக்கப்படலாம் என்ற பேச்சுப் பலமாக இருக்கிறது.

## ஐரோப்பாவின் எதிர்காலம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ருஷிய முறைகள் பரவவிடாமல் தடுக்கப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்யும் என்பதற்குச் சந்தேகமில்லை ஆனல் இப்பிரயத்தனங்கள் யாவும் பிரதிகூலம் அடையும். ஏன்? சென்ற 5 ஆண்டு காலத்தில், உலக அபிப்பிராயம் திடமொன்று பொதுவுடைமைக் கொள்கையைச் சார்ந்து வந்திருக்கிறது. மக்கள் யாவரும் சமம் என்ற பொதுவுடைமை லட்சியத்தை நோக்கி உலகம் முன்னேறிப் போகின்றது. அதனைத் தடுக்க எவராலும் முடியாது.

### ஜெர்மனியின் எதிர்காலம்

12 ஆண்டு காலமாக நாஸிக் கட்சியினரின் அதிகாரத்தில், பழைய முதலாளித்துவக் கொள்கை ஜெர்மனியில் அழிந்துவிட்டது. ஜெர்மன் மக்கள் உஜ்ஜீவிக்கவேண்டுமானல், இனி, அவர்கள் ருஷியாவுடன் நேசபான்மையுடன் இருக்கவேண்டும் இந்த நிலைமை ஏற்படுமா என்பது ஜெர்மனியை இப்போது அடக்கியாளும் வல்லரசுகளில்தான் தங்கியிருக்கிறது பழிக்குப்பழி வாங்கவேண்டும், ஜெர்மனியரை அவமானப்படுத்தல்வேண்டும் என்ற எண்ணம் இல்லாது, ஜெர்மன் மக்களை மனித நீதியுடன் வல்லரசுகள் நடத்துமேயானல், அவர்கள் நாஸிக் கட்சி வகுத்த திட்டத்திலிருந்து விலகிச் சமூக முன்னேற்றத்துக்கான, முற்போக்கான பாதையிற் செல்ல முடியும். இல்லை, ஜெர்மனியை மிதிக்கவேண்டும் என்ற மனப்பான்மை வல்லரசுகளுக்கு இருக்குமேயானல், அது மீண்டும் ஆபத்தில்தான் கொண்டுபோய்விடும். இன்று தற்காலிகமாக ஜெர்மனியரை அடக்கலாம், ஒடுக்கலாம். ஆனல், அது பின்னுக்கு இன்னேர் ஐரோப்பிய யுத்தத்துக்கு ஏதுவாயிருத்தலை நாங்கள் காணமுடியும். ஐரோப்பிய மக்களின் விதி இன்று ஒரு மனுஷன் கையில் தங்கியிருக்கிறது. இன்னும் சில வருஷங்களுக்கு ஐரோப்பிய நாடுகளின் எதிர்கால நிலையை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்த மனுஷனிடமே உண்டு. அவர்தான் ருஷியச் சர்வாதிகாரி மார்ஷல் ஸ்ராலின். எனவே, ருஷியாவின் நடவடிக்கைகளைச் சர்வ உலகும் இமைகொட்டாமல் நோக்கிக்கொண்டேயிருக்கிறது.

## உலகம்பலவிதக் கதை

(2ம் பக்கத் தொடர்ச்சி

உலகம் விபரீதமாக எண்ணிக்கொள்ளுமெனப் பயந்துபோலும் அந்தப் பெண் எனக்குஞ் சொல்லாது மறைத்திருத்தலுங் கூடும்; கிடக்க, கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்றவாறு துறவியாகிய எனக்கேன் அந்த விசாரமெல்லாம், இரஞ்சிதத்தை நான் இனிமேற் காணும்போது நீர் அவளைக் காண விரும்பியதாகச் சொல்லுகிறேன்" என்று கூறி முடித்தாள்.

### "மாசற்ற நெஞ்சுடையாள்"

'ஆச்சி, அந்த உதவியைஎனக்குச் செய்யுங்கள்: ஆனல், இரஞ்சிதத்தை யிட்டு விபரீதமாக ஏதும் எண்ணுதீர்கள்: அவள்மாசற்றநெஞ்சுடையவள்; உயிர்போக நேர்ந்தாலும் தவறு செய்ய உடன்படாள்; நான் சொல்வதை நிசமென நம்புங்கள்" என்று விசுவநாதன் பின்னருஞ் சொல்ல, 'அப்பனே, நான் நம்புவதனுலும் நம்பாதொழிவதனுலும் அந்தப் பெண்ணுக்கு ஒரு கெடுதியுமில்லை; அவளிடத்திற் சந்தேகங் கொண்டால் என் துறவுக்கே பங்கம் நேரும்; ஆனதால் அதனையிட்டு நீர் கவலைப்பட வேண்டாம்" என்று தேறுதல் சொன்னுள் துறவியம்மாள்; அந்தச் சமயத்தில் விசாலாட்சியும் தலைவாசற் பக்கம் வந்தாள்; வந்தவள் தன் கணவனை நோக்கி, "எங்கள் ஆச்சியைக் காணவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தீர்களே; இப்பொழுது ஆச்சியுடன் பேசவேண்டிய கருமங்களெல்லாம் பேசிவிட்டீர்களோ" என்று கேட்க, விசுவநாதன் "ஓம் பேசிவிட்டேன்; இரஞ்சிதத்தைக் காணநேர்ந்தால் நாங்கள் தேடியதாக இரஞ்சிதத்திற்குத் தாம் தெரிவிப்பதாம்; ஆச்சி, அந்த ஒரு உதவியையுஞ் செய்தாற் போதும்" என்றுன் விசுவநாதன்.

### அண்ணு' என்னை மறந்துபோனீர்களா?

"இந்த ஆச்சி தெரிவித்தபின் இரஞ்சிதம் தானுக வந்து உங்களைக் காண்பதா? இல்லையேல் நீங்கள் அந்த அம்மாளைப் போய்க் காண்பதா" என்று புன்சிரிப்பரும்பத் தன் கணவனைக் கேட்டாள் விசாலாட்சி; இரஞ்சிதம் வந்தாற் கண்டுகொள்வேன்; இல்லையேல் இருக்குமிடந் தேடிப் போய்க் காண்பேன்: இதில் என்ன சங்கடம்" என்றுன் விசுவநாதன்; "ஆச்சி, இரஞ்சிதத்தை ஊருக்கு அழைத்துப் போவதற்காக, அந்த அம்மாளுடைய நெருங்கிய உறவினரொருவர் வந்திருக்கிருராம்: அவருடைய பெயர் இராமச்சந்திரனும்; அவர் மிகவும் நலலவராம்; இரஞ்சிதத்திற்கும் ஊக்குமீண்டுபோகப் பிரியமாம்; இவைகளெல்லாம் உண்மைதானு" என்று ஒன்றுமறியாதாள் போல் வினவினுள் விசாலாட்சி; இவைகளைக் கேட்ட துறவியம்மாள் "அப்படியொருவர் இரஞ்சிதத்தின் நெருங்கிய உறவினர் ஊரிலிருந்து இங்கு வந்து நிற்பது நிசந்தான்; அவர் உங்கள் விவாக தினத்தன்று பந்தரில் வந்திருந்தார்; நீங்கள் காணவில்லைபோலும்; ஆனல் இரஞ்சிதத்திற்குத் தான் ஊருக்குப் போகவேண்டுமென்ற நோக்கம் உண்டோ இல்லையோ அதனை இப்பொழுது நாம் அறியேம்" என்றுள் துறவியம்மாள்; இங்ஙனமாக, விசாலாட்சி தன்நாயகனைப் போசனமருந்தும்வண்ணம் அழைத்துப் போகும் போது, அத் துறவியம்மாளுக்கு ஏதோ குறிப்பாற் சொல்லிவிட்டு, அவளைத் தன் படுக்கை யறைக்குக் செல்லச்செய்தாள்; தன நாயகன் போசனமுண்டபின் தானும் போசனம் முடித்துக்கொண்டு தன் படுக்கையறைக்குச் சென்றுள்; சென்று சிறிதுநேரம் அந்தத் துறவியம்மாளுடன் பேசிவிட்டு, மீண்டு தன்னுயகன் இருக்குமிடத்திற்கு வந்தாள்; தன் கணவனை அன்புடன் நோக்கி "உண்மையாக இரஞ்சிதத்தை இப்பொழுது காண விரும்புகின்றீர்களா" என்று புன்முறுவலுடன் வினவ, விசுவநாதன், "என் அன்பிற்குரியாளே, அந்தக் கன்னிகையை நான் காண்பது, உமக்கேனும் துறவியம்மாளுக்கேனும் விருப்பமில்லையெனக் கண்டால், நான் இந்தநிமிஷமே அந்த நோக்கத்தை அறவே மறந்து விடுகிறேன்" என்று சிறிது கலக்கத்துடன் சொன்னுன்; "என் கவலைப்படுகிறீர்கள்; உங்கள் நோக்கத்திற்கு மாருக நடப்பவளல்லேன்; எங்கள் துறவியம்மாளெனிலோ மகாஉத்தமி; அந்த அம்மாளையிட்டுச் சந்தேகப்படாதீர்கள்; இரஞ்சிதத்திடம் உள்ள நல்ல குணமெல்லாம் இந்த அம்மாளிடத்தில் இருக்கும்: இந்த அம்மாளிடத்திலுள்ள நற்குணங்கள் முழுவதும் இரஞ்சிதத்திடங் காணலாமாம்; இருவருக்கு மிடையே எவ்வகையான பேதமுமில்லையாம்: இப்பொழுதே நீங்கள் இரஞ்சிதத்தைப் பார்க்கவேணு மென்ருலும் எங்கள் துறவியம்மாள் மூலமாக அந்த அம்மாளை இங்கே தருவிக்கலாமென யோசிக்கிறேன்" என்றுள் விசாலாட்சி; "என் கண்ணே, என்ன விநோதமாக விருக்கின்றது! என்னுடன் வேடிக்கையாக வார்த்தையாடுகின்றீரா? இந்தஅகாலமான நேரத்தில் எங்கள் துறவியம்மாளை அனுப்பி இரஞ்சிதத்தை இங்கே வரச்செய்வது அழகல்ல; நாளைப் பகல் வரக் கூச்சப்பட்டால், மாலைவேளையில் வந்தாற் போதும்" என்று இதமாகச் சொன்னுன் விசுவநாதன்; "இரஞ்சித அம்மாள் இப்பொழுது வந்தால், நீங்கள் வரவேண்டாமென்று சொல்வீர்கள் போலும்" எனப் புன்முறுவல் பூத்தபடி கேட்டாள் விசாலாட்சி; "வருகிறவர்களை வேண்டாமென்று சொல்ல மனமெழுமா" என்றுன் விசுவநாதன்; "சற்றுநேரம் இங்கே இருந்து கொள்ளுகிறீர்களா நான் படுக்கை யறைக்குட்போய் ஐந்துநிமிஷத்துள் மீண்டுவருகிறேன்" என்று மனையாள் கேட்ப, "ஐந்து நிமிஷமல்ல, அரையணி நேரமானலும் போய் மீண்டு வரலாமே; இதற்கும் உத்தரவு கேட்க வேணுமா" என்று அன்பு பெருகச் சொன்னுன் நாயகன்; உடனே நாயகி தன் படுக்கையறையை நோக்கிச்சென்றுள்; அந்தநேரம் சிந்தனையோடுகூடியவனுயிருந்தான் விசுவநாதன்; ஐந்து நிமிஷம் செல்ல வில்லையெனலாம்; "இங்கே பாருங்கள் உங்கள் அரியதங்கையாரை" என்று சொல்லியபடி மகாலக்ஷ்மியையொத்த ஒரு கன்னிகையைத் தன்கையால் அணைத்துமெல்ல நடத்திக்கொண்டு வந்து தன் கணவன் முன்னிலையில்விட, கண்ட கணவன் திடுக்குற்றுச் சரேலென இருக்கைவிட்டெழுந்துநின்று தன் கட்புலனிற்சந்தேகங்கொண்டானுய், "நான் காண்பது கனவா, நனவா" என்று பதைபதைத்த வண்ணம் நின்றுன்; "அண்ணு! என்னை மறந்துபோனீர்களா" என்று குயில்பயில் ஓசையோடும் ஆதரம் பெருகக் கேட்டாள் அந்தப் பெண்; "என் அருமைத் தங்காய் உம்மை எப்படி மறக்க முடியும்" என்று கண்களில் நீர்ததும்ப நின்றுன் விசுவநாதன்; இருவர் நிலையையுங்கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியோடு நின்றுள் விசாலாட்சி

வரும்

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சைவமகளிர் கலாசாலையும் வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தின் பொருட்டு இன்று (5-4-46) விடுதலை செய்து, வருகிற மேமீ 6ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென அறியலாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனவு நொத்தீசு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
சாவகச்சேரி தாமோதரி பிரன்சிஸ் அல்லது தம்பையா வழக்காளி
ஷையூர் தாமோதரி கைம்பெண் மதலீனம் பதில் வழக்காளி,

இல. 15398. எதிர்

1. ஷையூர் சாமுவேல் முத்துத்தம்பி அரியரத்தினமும் 2. மனைவி பாசாசத்திப்பிள்ளையும் எதிராளிகள்

இவ்வழக்குத் தீர்வையின் பேரால் எதிராளிகள் பதில் வழக்காளிக் கிறுக்கவேண்டிய ரூபா 810-00 உம் இதற்கு 1942ம் ஆண்டு வைகாசி 13ந் திகதி தொடக்கம் இறக்கும் வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் இவைகளில் அறவிட்ட ரூபா 60 ஐக் கழித்த மிகுதியை அறவிடுதற்குப் பின் விபரிக்கப்படு மாதனம் 1946ம் ஆண்டு சித்திரைமாசம் 25ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணியின் விபரம்

சாவகச்சேரியிறை சூரிமுதலி வளவும் சிவகத்தின் வளவும் கி. பர. $6\frac{7}{8}$ எல்லைகிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு பொன்னம்பலம் பெண் வள்ளியம்மைக்கும் நல்லாச்சிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம், தெற்கு நாகலிங்கம்பெண் சரஸ்வதிப்பிள்ளைக்குரிய வாதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் டயிர் கல்வீடு கிணறு மற்றும் அதைச்சேர்ந்தவைகளும்

இ. வேலுப்பிள்ளை,
கொம்மிஷனர்.

1946ம்ஆண்டு, சித்திரைமீ, 1உ.
Mis 5 5-4

## கோட்டு விளம்பரம்

### காணி விற்பனவு

வழக்கு இலக்கம் 229. பராமரிப்பு தத்துவம்: டிஸ்திறிக்கோடு, யாழ்ப்பாணம்.

A. R. வைத்தீஸ்பரன் மகள் யோகதேவிக்குரிய இதன் கீழ் விபரிக்கப்படும் காணியை விலைக்கு வாங்க விரும்புவோர் தங்கள் கேள்விப்பத்திரங்களை (Tenders) பிறக்ரர் C. C. சோமசேகரம், வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம், அல்லது டிஸ்திறிக்கோட்டுச் சக்கிடுத்தாருக்கு 1946ம் ஆண்டு வைகாசிமாசம் 10ந்தேதிக்கு முன்னதாகஅனுப்பவேண்டும்.

### காணியின் விபரம்

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு இறை (மணியகாரன் ஒழுங்கை) வேடபடி வழவும் மறு பிரிவுகளும் (அனுக்காத்தியர் வழவு) பரப்பு நில இலாச்சம் $17\frac{1}{2}$ எல்லை கிழக்கு விசுவலிங்கம் கைம்பெண் பொன்னம்மாவும் சிவசுப்பிரமணியம் இந்திராசாவின் ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஆறுமுகம் மகள் சிவகாமசவுந்தரி, தெற்கு மாணிக்கம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும் இதன் அடங்கலும்.

(Mis. 2—5-4 46)

## அங்கத்தவர் பதவிக்கு தமிழ்ப் பிரதிநிதி வெற்றிபெற்றார்

சென்ற 30-3-46ல் நடந்த அநுராதபுர நகரசபைத் தெரிவில், அங்கத்தவர் பதவிக்கு அபேட்சித்து முன் வந்து நின்ற மூவருள் தமிழ்ப் பிரதிநிதி சோ. சபாபதிப்பிள்ளையவர்கள் 150ற் கதிகமான வாக்குரிமைச் சீட்டுகளால் வெற்றிபெற்றாரென்பதைக் கேட்டுமகிழ்ந்தேம். இவ்வநுரதபுரியில் தமிழர்களின் ஆதிக்கத்தை முற்றாய் நீக்கி அடக்கி ஒடுக்கி விடவேண்டுமென்று நம் சிங்கள சகோதரர்கள் காலத்துக்குக் காலம் செய்துவரும் தந்திரங்களும் அட்டூழியங்களும் அளப்பில. அநுரதபுரப் பட்டினத்தை அப்படியே தூக்கித் தங்களாதிக்கத்துக்குள் உள்ள இடத்தில் வைத்து விடவும் சில குறுகிய நோக்குள்ள சகோதர மகான்கள் திட்டம் போட்டுள்ளார்கள். என்னஇருந்தும் 'தாமொன்று நினைக்கத் தெயவம் ஒன்று நினைக்கும்' என்றவாறு, இவர்களும் தமிழர்களின் உதவியை நாடாது முன்வருந் தெரிவுகளில் எல்லாம் தோல்வியே அடைந்துவருகிறார்கள். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்கள் அல்லவா' சீரிய போக்கும், நிறைகோல் போன்ற நேரிய ஒழுக்கமுந்தான் அவர்களுக்குக் கூரிய அறிவைக் கொடுத்துத் தெய்வ சகாயத்தால் வெற்றியை ஈட்டிக்கொடுக்கின்றது. முறை தவறியும், சாதிபேதம் பாராட்டியும், பொதுஉரிமையைச் சுய உரிமையாக்கியும் ஆணவவெறி பிடித் ததிகாரம்செலுத்தும் மக்கள் வெற்றி பெற முடியுமா? 'அநுரதபுரி நகரசபை இரத்தக்களரியைப்பற்றிக் கேள்விப்படாதார் எவருமில்லையெனலாம், இவையெல்லாம் அவர்களின் வீறுடம்பர, அகங்கார மிடுக்கின் விளைவா யெழுவனவே! ஓர் காலம் எல்லாள மகாராசா எவ்வாறு நீதி திறம்பாது, சாதி, சமய பேதம் பாராட்டாது, ஒருபாற் கோடாது, நீதி திறம்பாது, யாவரையும் ஒப்பநோக்கிஅரசாண்டாரோ அதேபோல என்றும் நம் தமிழர் நீதி திறம்பாது வெற்றி பெற்றுவர இறையருள் முன்னிற்பதாக. வெற்றிபெற்ற அங்கத்தவர் மேளவாத்தியத்தோடு அநுரதபுரம் கதிரேசன் கோவிலுக்கும் விவேகானந்தசபைக்கும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுப் பல்லோரது உபசாரணையைப் பெற்றுக்கொண்டார். —கடித.

## ஜெர்மனியர்க்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து வேண்டும்!

### பிரிட்டிஷார்க்குக்கீழ் இருக்க ஆசையாம்

ஜெர்மனியின் றைன்லாந்துப் பிரதேசத்தை, பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத்தின்கீழ் உள்ள ஓர் சுயேச்சை நாடாக்கச் சில ஜெர்மன் பிரமுகர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள்.

## ஜப்பானிய சேனாதிபதிக்கு மாணதண்டனை

பிலிப்பைன் தீவுகளில், ஜப்பானிய பிரதம சேனாதிபதியாக இருந்த மஸஹாரு ஹொம்மா என்பவர் தூக்கி விட்டுக் கொல்லப்பட்டார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

4-ம் பக்கத் தொடர்ச்சி

வி என் ராஜன் புல்லாங்குழல் 9 ரேடியோ நாடகஇசை 9.15 ஆங்கிலத்தில் செய்கள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 தங்க இசை 10 நிலசவேலை இசைத்தட்டு 10 30 முடிவு.

### திங்கள் ஏப்ரல் 8

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 வி என் விஜய ராகவன் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவிழிமிழலை இசைத்தொகுப்பு 8.30 ஒளிக்கரை வி காளிதாஸ் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருவாரூர் வி ஆர் தில்சம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு

மாலை 5 குளிக்கரை வி காளிதாஸ் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள வானிலை 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 குறுக்குடி சுந்தரம் பாட்டு 7 15 நாளைய இந்தியா 7-30 தமிழில் செய்திகள் 7-45 பாலக்காடு ராமபாகவதர் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 திரை இசை இசைத்தட்டு 10 திருச்சி வாத்யகோஷ்டி 10-30 முடிவு.

### செவ்வாய் ஏப்ரல் 9

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பூவனூர் எஸ் சுந்தரேசமுதலியார் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 மைசூர் டி சௌடையா வயலின் இசைத்தட்டு 8.30 டி சுப்பிரமணிய தேசிகர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 வி ஏ நாராயணன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சாவித்ரி கணேசன் பாட்டு 6.30 கிராம நிகழ்ச்சிகள் 7 டி சுப்ரமண்ய தேசிகர் பாட்டு 7-15 வியாபாரச் செய்திகள் 7 30 தமிழில் செய்திகள் 7.45 பல்ஜான்யம் நடகம் 8 சாவித்திரி கணேசன் பாட்டு 8.45 வி ஏ நாராயணன் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9. 0 அறிவிப்புகள் வானிலை 9-45 ராமநாத ரம ஸ்ரீனிவாச ஐயங்கார் பாடல்கள் 10 நீங்கள் கேட்டவை [illegible] 10-30 முடிவு.




REGD

## கிறைப் - விற் - டி

(GRIPE—VIT—D)

குழந்தைகளுக்கு
ஆரோக்கியத்தைத் தரும்

வயிற்றுவலி, புளிப்புத்தன்மை,
உவார்தி, வாய்வுத்தன்மை, வலி,
பல்லரும்பும்போதுள்ள வருத்தம்,
வயிற்றோட்டம், விக்கல் முதலிய
குழந்தைகளின் சகலரோகங்களுக்கும்
நிச்சய நிவாரணம்

**கிடைக்கும் இடங்கள்:**

கொம்மேஷல் பிறெஸ்
டயறம்ஸ்
சிற்றி டிஸ்பென்ஸரி
நியூற்றன்ஸ் } பெரியதெரு, யாழ்ப்பாணம்.

றோயல் பாமேசி
றோயல் டிஸ்பென்ஸரி
மெடிக்கல் ஹோல்
யாழ்ப்பாண ஐக்கியசங்கக் கடை } ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

K. C. தெட்சணாமூர்த்தி, காங்கேசன்துறைறோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், (இலங்கை)

(Mis 18?, 31—31-12 46)

## குடைமுத்திரை (மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

### கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினால் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினால் உடையாது. மழையினால் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனாவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று எலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று. வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்.

'சோல் ஏஜென்ஸ்'
ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3 —12-9 (வெ)

## மலேரியா மஹா தைலம்

அனேகர் மலேரியாவால் பீடிக்கப்பட்டு இத்தைலம்பாவித்துச் சுகப்பட்டு இருக்கிறார்கள். காய்ச்சல் இருக்கும் பொழுதும் பயம் இல்லாமல் தைலம் தலைக்கு வார்க்கலாம். 20 வருஷம் அநுபவம் உள்ளது. பதிவுசெய்யப்பட்டது. ஒருமுறை பாவித்துப்பாருங்கள்

| | | |
|---|---|---|
| 6 | அவுன்ஸ் போத்தல் | 5—00 |
| 12 | ,, ,, | 10—00 |
| 24 | ,, ,, | 18—00 |

**பொ. செல்லையா,**
ஆயுர்வேத வைத்தியர்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

Mis 237 1 3-46—1-3-47 வெ

## நவீன வேலைப்பாடுள்ள

பவுண் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு
நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

### கந்தையா பெரியதம்பி

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை றோட்
தட்டாதெரு யாழ்ப்பாணம்

Mis 196 7-1 — 7 7 (வெ

## ——சங்கீத அபிமானிகளுக்கு ஓர் பொக்கிஷம்——

அன்பர்களே! உங்கள் அருந்தநணத்தை இழந்துவிடாதீர்கள்.

பழுதடைந்த வாத்தியக்கருவியை உடனே எங்களிடம் கொண்டுவாருங்கள். வீணை, தம்புரா, பிடில், ஹார்மோனியம் முதலியவற்றை வெகு நேர்த்தியாகவும் புதிதுபோலவும் உடனுக்குடன் பழுது பார்த்துக் கொடுப்போம். புதிய ஹார்மோனியங்கள் விலைக்கிருக்கின்றன. புதிய ஹார்மோனியம் தயாரிப்பதிலும் பழுது பார்ப்பதிலும் வெகு திறமை வாய்ந்தவர்கள் எங்கள் கம்பனியில் இருக்கிறார்கள். குறைந்தது மூன்று வருட உத்தரவாதம் அளிக்கப்படும்.

**கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கம்பனி**
வண்கிழக்கு, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

484. K. K. S றோட். Mis 242 8-3—8-4


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Firdav April. 5, 1946 ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org